# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C No. 108 / 2024 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 9 |

| | | |
|---|---|---|
| Name | : | ஆனந்தன் |
| Father's Name | : | நல்லசெல்வம் |
| Village | : | தம்பிரான்பட்டி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | ஓட்டுநர் |
| Religion | : | இந்து |
| Age | : | 33 |
| ACCUSED | | ரெங்கநாதன் – ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2025.

<u>முதல் விசாரணை:–</u>

நான் தற்போது தம்பிரான்பட்டியில் குடியிருந்து ஓட்டுநராக தொழில் செய்து வருகின்றேன். விபத்தில் இறந்து போன ராஜேந்திரனை எனக்கு தெரியும். ராஜேந்திரன் இறந்து போன விபத்து சம்மந்தமாக போலீசார் சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்த இடத்தை பார்வையிட வந்தனர். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கொண்டு சம்பவ இடத்தின் அமைப்பை எழுதிக்கொண்டனர் அவ்வாறு எழுதிய பார்வைமகஜரில் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டனர். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:- (எதிரி தரப்பில்)**

விபத்தில் இறந்து போன ராஜேந்திரன் மற்றும் காயம்பட்ட செந்தில்குமார் ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.8 பாண்டியன் என்பவரை எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு மறுநாள் நான் பெரம்பலூரில் ஜாமான் வாங்க சென்றேன். போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் வரைபடம் வரையவில்லையென்றால் நான் அந்த இடத்திற்கு சென்ற போது கூட்டமாக இருந்தது அப்போது போலீசார் படம் வரைந்து எழுதிக்கொண்டிருந்தனர். ஏற்கனவே தயார் செய்து எழுதி வைத்திருந்த பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் அப்போது தான் எழுதிக்கொண்டிருந்தார்கள். இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுக்கவில்லையென்றால் சரியல்ல. போலீசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

**மறு விசாரணை:- இல்லை.**

**ஒப்பம்/- சி. சங்கர்,**<br>**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**<br>**பெரம்பலூர்.**